Coir Industries.

* 524 *Q.*—THIRU A.M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to start coir industries in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) அரசாங்க தொழில் வணிகத்துறையின் மூலம் கயிற்றுத் தொழிற்சாலை நடத்துவதற்கான திட்டம் ஏதுமில்லை.

இம்மாநிலத்தில் கயிற்றுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் மத்தியப் பணிச் சங்கங்களும் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மிதியடி கெட்டிநார் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக முன்னோடித் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் தென்காசியில் நிறுவியுள்ளது. அத்தொழிற்சாலை 1968 ஜூன் இடைப்பகுதியிலிருந்து இவற்றைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. கெட்டிநார், கலவைத் தேங்காய் நார் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கென 20 தொழிற் பிரிவுகளை நிறுவும் திட்டத்திற்கும் இந்தப் பிரிவுகளுக்கான பட்டுக்கோட்டையில் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கும் அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. நிலம், கட்டிடம் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு, தொடராச் செலவு ரூ. 3 லட்சம், பங்கு மூலதனத்திற்கு ரூ. 10,000 சேம நிதி ஒதுக்கத்திற்கு ரூ. 5,000 இத்திட்டத்திற்குச் செலவாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் கயிற்றுத் தொழிற்சாலைக்குப் பதிலாக நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். இந்த நார் உற்பத்தியின் மூலம் நமது நாட்டிலேயிருந்து வெளிநாடுகளுக்கு நாம் ஏதாவது ஏற்றுமதி செய்திருக்கிறோமா? அப்படிச் செய்திருந்தால் எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு தொழிற்சாலை இருப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்றுமதி பற்றிய விவரம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஈத்தாமொழியில் கன்னியாகுமரி ஜில்லாவில் பயிற்சிப் பள்ளிக்கூடம் இருக்கிறது . அங்கு தாராளமாக கயிற்றுக்கான மூலப்பொருள்கள் இருப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சிப் பள்ளி இருக்கிறது. 40 மாணவர்களுக்குப் பயிற்சிகொடுக்கப்படுகிறது. அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் இருக்கிறதா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் வட்டத்திலே அக்ரஹாரம் நாட்டாமங்கலத்தில் கயிற்றுத் தொழிற்சாலை இயங்கியது. தற்போது சில ஆண்டுகளாக நடைபெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாக அதைப்பற்றிக் கேட்க வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே குடிசைத் தொழிலாக இந்தக் கயிற்றுத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்ய முன் வந்து அதை அபிவிருத்தி செய்ய ஊக்கமளிக்க முன் வருவார்களா?

1969 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

அணைக்கட்டுகள்

***525 வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை என்னும் பள்ளத்தின் மேல், செல்லம்பாளையம் கிராமத்துக்கு பக்கத்தில் அணை கட்டும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) & (இ) எண்ணமங்கலம் கிராமத்திற்கு அருகில் வழுக்குப்பாறை பள்ளக் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு (பாசனத்) தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. அதன் விவரம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கராக்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும்? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 750 ஏக்கர் புதிய பாசனத் திட்டம், 977 ஏக்கர் பாசன ஊர்ஜிதப்படுத்துவதற்கு. மொத்தம் 1,860 ஏக்கர். இதன் உத்தேசச் செலவு ரூ. 25 இலட்சம்.

***526 வினா.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஓடும் வறட்டுப் பள்ளத்தில் மேல் எண்ணமங்கலம் கிராமத்திற்கு பக்கத்தின் அணை கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அணை, 2,089 ஏக்கர் அடங்கிய புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதியளிக்கும். இதற்கு ரூபாய் 40·90 லட்சம் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையின் உள்ளூர் அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த அந்தியூர் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு கோடைகாலத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப் படவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு திட்டங்களை யும் விரைவாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செங்கத்திற்கு வடக்கே செய்யாற்றின் குறுக்கே பாலம்

*** 527 வினா.—திரு. பி. எஸ். சந்தானம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் கிராமத் திற்கு வடக்கே செல்லும் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்ட சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?